**மில்லனிய பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மில்லனிய பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மில்லனிய பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 6.7 இன் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த நியமத்தின் 3.9 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட மற்றும் | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளபடியான பெறுமதிகள் ஒப்பீட்டுரீதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 3.13 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 7,821,557 தொகையான இருப்பு மற்றும் ஒதுக்கங்களின் பெறுமதி காண்பிக்கப்படாமையால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக இருப்பின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 410,292 தொகையான புத்தகப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பௌதீக இருப்பு பெறுமதியை கணக்கீடு செய்யும் போது தாமத வழுவினால் ஏற்பட்டிருந்தது. | பௌதீக இருப்பு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 185,040 பெறுமதியாக காணப்பட்ட வேலை இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பௌதீக இருப்பு பெறுமதியை கணக்கீடு செய்யும் போது தாமத வழுவினால் ஏற்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | உள்ளூராட்சி அமைச்சிலிருந்து நன்கொடையாக கிடைத்த ரூபா 1,496,250 பெறுமதியான என்ஜின்களுடனான 03 படகுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சகல நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 1000 L 29 நீர்த்தாங்களின் கிரயம் ரூபா 311,750 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 163,630 ஆக ரூபா 148,120 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் வேலைக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 33,304,784 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 34,185,058 ஆக ரூபா 880,274 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வேலை கடன்கொடுத்தோர் மீதியை கணக்கீடு செய்யும் போது வழு ஏற்பட்டிருந்ததை அறியத் தருகின்றோம். சரியான மீதி ரூபா 33,304,784 ஆகும். | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டில் கட்டிடங்களாக ரூபா 11,734,365 மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 7,517,323 ஆக ரூபா 4,217,042 குறைத்து மூலதனமாக்கப்பட்டிருந்தது. | கட்டிட கணக்கில் மாத்திரம் ரூபா 4,217,042 குறைத்து மூலதனமாக்கப் பட்டிருந்ததை அறியத் தருவதுடன் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும் பேரேட்டின் பிரகாரமான பெறுமதிக்கும் இடையே ரூபா 354,973 வேறுபாடு மற்றும் 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களுக்கும் பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 2,320,668 வேறுபாடு காணப்பட்டது. | தாமத வழுவினால் ஏற்பட்டிருந்ததுடன் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளுக் கிடையிலான வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 69,892,149 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,146,994 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 மார்ச் 20 ஆந் திகதியின் பின்னர் புதிய சபையொன்றாக ஸ்தாபிக்கப்பட்ட மில்லனிய பிரதேச சபைக்கு பண்டாரகம பிரதேச சபையிலிருந்து கிடைக்க வேண்டிய சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் சரியான பிரகாரம் பகிர்ந்து வழங்குதல் 2021 யூலை 20 ஆந் திகதி வரையும் மேற்கொள்ளப்படாமையால் மில்லனிய பிரதேச சபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டைப் பேணுதல், சபைக்கு உரித்தான காணி மற்றும் கட்டிடங்களை புத்தகங்களுக்கு எடுத்தல் மற்றும் அவற்றின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், ஏனைய சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பாக சரியான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | பண்டாரகம பிரதேச சபை மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு மீள்நினைவூட்டலும் அனுப்பப்பட்டுள்ளது. | விரைவாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்து ஒதுக்கிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2021 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்கள் 2021 யூன் 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கொவிட் தொற்று நோயினால் தாமதம் ஏற்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். 2021 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்படும். | குறித்துரைத்த திகதியில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |